உ
சிவமயம்

"துறவி"

1955.

மன்மத மலர் 1	திங்கள் வெளியீடு.	ஆவணி இதழ் 8

துறவி

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,
திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர்:
சுவாமி சொரூபானந்தா.

ஆண்டுக் கட்டணம் ரூ 2/- தனி இதழ் அணா 3/-

"துறவி"

பொருளடக்கம்.

ஓம்:

" துறவி "

மன்மத மலர் 1	தமிழ் திங்கள் வெளியீடு.	ஆவணி இதழ் 8

கடவுள் வாழ்த்து.

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முண வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வர் மாற்பேறரே. —அப்பர்.

இன்பம்.

அதாவது துன்பத்தின் நீக்கம். நாடு செழிக்க வேண்டும். நாம் துன்ப மின்றிய இன்ப வாழ்வு வாழ வேண்டும். எல்லா உயிர்களும் துன்பமின்றிய இன்பத்தைத் தேடுதல் இயற்கைதானே? ஆயின் துன்பமின்றிய இன்பம் எவை என்பதைத் தெரிந்துகொள்ளும் அறிவு மக்கட் பிறவியினர்க்கே உளவாம். ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கியைந்த ஒன்றைஇன்பமாகக்கருதி மகிழ்கின்றனர் ஆயின் அவ்வின்பம் எல்லோருக்கும் ஒப்ப முடிந்ததாக இருக்க வேண்டும். அதுவும் சுருதி, யுக்தி அனுபவமென்ற மூன்றிற்கும் ஒத்ததாக அமைதல் வேண்டும். அவ்வாறுயின் அவ்வின்பம் தான் யாது எனின் துன்ப நீக்கமும் இன்ப அடைவும் ஆம். இதுவே வீடு எனப்படும். இதைத் தான் மறைகள் கூறுகின்றன. இதை எவ்வாறு உணரமுடியும்? இதற்காகப் புறப்பொருள் ஒன்றும் வேண்டுவதில்லை. பின்னையோவெனின், நம் உடம்பிலேயே அமைந்த கருவி, கரணங்களைக் கொண்டே உணரலாம். இதுபற்றிப் பின் ஆராய்வாம்.

மக்களாகிய நாம் மக்களாகவே வாழவேண்டும். உருவத்தால் விளங்கி செயலால் மாறுபடுகின்றோம். இதற்கு விலக்காயும் உளர்சிலர். பொருளினாலும், அறிவினாலும் நாம் செய்கின்ற குற்றங்களை மறைக்க முயல்கின்றோம். ஆனால் எங்கும் நிறைந்த இறை நம்உள்ளத்தேயும் இருப்பன், அறிவன், கணக்கும் எழுதுவன்

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே" —தேவாரம்

இறைவன் மகிழ நாம் நடந்து கொள்ள வேண்டும். இதைக் கருத்தில் இருத்தி அவரவர்கள் தகுதிக்கேற்ப இறைவனை வழிபடவேண்டும். சிறப்பாக இன்பவடி வினனாகிய இறைவனை இதயத் திருத்தி வேண்டிய வெல்லாந் தருவதும் நன்னெறியைக் காட்டுவதுமாய திரு ஐந்தெழுத்தை இடைவிடாது எண்ணுவோமாயின் "பேதமின்றி அவரவருள்ளத்தே மாதுந்தாமும் மகிழ்வர்" நமச்சிவாயவே நன்னெறி காட்டும்" என்பது தேவாரம். அதனால் இறவாத இன்பவீட்டினை யடையலாம். —அம்மை அப்பர் அருளுக.— —பதிப்பாளர்.

சைவசித்தாந்தம்.

சிவஞானபோதம்.

அருட்டிரு. திருநீ. சண்முகானந்த சுவாமிகள்,
(மதுரை.)

முன் (ம 1 இ 7 ப 87) தொடர்ச்சி.

எனவே, மந்திரம், பதம், வன்னம் என்னும் மூன்றன் வடிவாகிய சொற்பிரபஞ்சம், புவனம், தத்துவம், கலே என்னும் மூன்றன் வடிவாகிய பொருட் பிரபஞ்சம் தோன்றி நின்றழியும் என்பதை ஏதுக்களால் சாதித்தவாருயிற்று. இதனே,

"பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திரியாகும் பெற்றிமையி—ேேதாரோ
வொன்றென்றிற் றேன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து"

எனவரும் மெய்கண்டதேவர் திருவாக்கானும்

"ஓரிட மழியப் பின்னு மோரிட நிற்கு மொக்கப்
பாரிட மழிவ தின்று மென்றிடிற் பயில்வித் தெல்லாங்
காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனிற்
சீருடைத் துலகு காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்"

எனவருஞ்சித்தியாரானுங் கண்டுகொள்க.

இனியிவ்வதிகரணத்திற்கு இரட்டுற மொழிதல் என்னுந் தந்திரவுத்தியால், அவனவள் என்ற தனுற்பெறப்படுகின்ற வுயர்திணேயும், அதுஎன்றதனுற் பெறப்படுகின்ற அஃறிணேயும் என்னும் இருதிணேப்பகுதியினே யுடைத்தாய சொற்பிரபஞ்சத் தொகுதி, இங்ஙனம் அவயவப்பகுப்புடைமையும், சடமுமாய்ப் பலவுமாகையும் சுட்டியறியப்படுகையும், திதியின்பால் ஏனேயிரண்டுங் காணப்படுதலும் ஆகிய ஏதுக்களால் தோன்றி நின்றழிதலுடைத்து எனப் பொருள் கொள்ளுதலும் ஆகும். அற்றேல், "வேதம் நித்தியம்" என்றுஞ் சுருதிவாக்கியத்தோடு முரணுதோ? எனின் :—முரணுது, நித்தியனுகிய சிவபிரானுற் செய்யப்பட்டமையானும், இறுதிக்காலத் தவனிடத் தொடுங்கிய வேதம் படைப்புக்காலத்து முன்போலவே தோன்றுதலானும் நித்தமென்றுபசரித்துக் கூறப்படுமாகலின் ஆகமங்களே நித்தமென்பதும் இக்கருத்தே பற்றியென்றுணாக. அங்ஙன்கொள்ளாக்கால், "வேதம் பரமசிவனுற் செய்யப்பட்டது" என்னும் பிருகதாரணிய சுருதியோடும், "அட்டாதசவித்தைக்கும் முதற்கருத்தாவாகிய விச்சூலபாணி" என்னுஞ் சிவபுராண வசனத்தோடும், ஈண்டுக்கூறும் கருதளவையோடும் முரணுமாறறிக.

இனி இரண்டாமதிகரணம் வருமாறு :— முதலதி கரணத்தில் உலகம் நித்தியமெனக்கொண்ட மீமாஞ்சையாரையும், உலோகாயதரையும், சொல்லும் பொருளும் என விருவகைப்பட்டவுலகமும் தோன்றி நின்றழியுமெனக்கூறி மறுத்தவழி, உலகம் மூவினையுடைத்தாயினும் அதற்கொருகருத்தா வேண்டுவதில்லை யெனப் பிணங்கும் புத்தர் முதலியோரை மறுத்துக் கருத்தாவுண்மைசாதித்தற்கெழுந்தது இவ்வதிகரணமெனவுணர்க. அதிகரணத் தொடர்பும் இதனானேவிளங்கும். முக்காலத்தும் இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு உற்பத்தியின்மையின், ஈண்டுற்பத்தி காணப்படுதலான் மேற்சாதிக்கப்பட்ட முத்தொழிலுக்குரிய வுலகம் உள்பொருளேயாமென்பதும், மண் முதலியவற்றிலுள்ளதாகிய குட முதலியவற்றிற்குக் குயவன் முதலிய கருத்தாவையன்றி, வினைதல் முதலிய செய் தொழிலுண்டாகாமையின், மேல் உள்பொருளெனச் சாதிக்கப்பட்டவுலகமும் தொழிற்படுத்தும் நிமித்த காரணமாகிய கருத்தாவையுடைத்தா மென்பதும், எப்பொருளெதன் கண் ஒடுங்குமோ அப்பொருள் அதன் கண்ணுற்பத்தியாம், மண்ணிற் குடம் போலும், என்னும் அவிநாபாவசம் பந்தத்தால் உலகஞ்சங்கார காரணன் மாட்டொடுங்குதலின் மீளத் தோன்றுங்கால் அவனிடத்தினின்றுந் தோன்றுதலே பொருத்த முடைத்தா யென்பதும் இவ்வதிகரணத்தாற் போந்த பொருளாம். எனவே, ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை, என்பதை மேற்கோளாகவும், இல்லதற்குத்தோற்ற மின்மையின், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்பவற்றை ஏதுக்களாகவும் கண்டுகொள்க.

அற்றேல், ஏதுவுந்துணிபொருளும் ஒருங்கு நிற்பின் அன்றே பொருளுண்மை துணியப்படும. அங்ஙனன்றி, இல்லதற்குத் தோற்ற மின்மையின், என்புழி, ஏது இல்லதன் கண்ணும், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்புழி, ஏதுஉள்ளதன் கண்ணும் துணிபொருளாகிய உற்பத்தி உலகின் கண்ணுமாய் வேறு நிற்றலின், அவற்றான் அது துணியப்படுமென்பது பொருந்தாது. அன்றியும் செய்வோரின்றிச் செய்வினையில்லை யென்பதும், சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்பதும், பொதுவுஞ் சிறப்புமாய் நிற்றலேயன்றிப் பொருளான்வேறன்மையின்" மலைதீயுடைத்து, நெருப்புடைமையான், என்பதுபோல அநுமானமாதற்குப் பொருந்தாதாம். இன்னும் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையில்லை யென்பதனால் உலகிற்குக் கர்த்தாவொருவனுண்டென்பது மாத்திரமே பொதுவகையாற்றுணியப்படுமன்றிச், சிறப்புவகையாற் சங்காரக் கடவுளென்பது அதனாற் றுணியப்படாதாம் ஆகலின் ஈண்டுக்கூறும் ஏதுவும் துணிபொருளுந் தம்மிற் பொருந்தாவாம் எனில் :— சொற்கள் பெருகாமைப் பொருட்டுத் துணிந்ததாக வைத்து அவ்வாறு கூறினும், "உலகம் உள்ளது; தோற்றமுடைமையின், யாது இல்லது, அதுதோன்றுது முயற்கோடு போலும்" என்னும் கேவலவெதிரேகி யநுமானத்தால் திி யென்பதனாற் பெறப்படும் உள்ளதாதலைச்சாதித்துப் பின்னர்.

"உலகம் செய்வோனை உடைத்து, உள்ளதாய்க் காரியப்படுதலின்; யாது உள்ளதாய்க் காரியப்படுவது, அது செய்வோனையுடைத்து; குடம்போலும்" என்னும் அந்வய அநுமானத்தானே தோற்றிய என்னும் பிறவினை வாய்பாட்டாற் பெறப்படுங் கருத்தாவொருவனைப் பொதுவகையாற் சாதித்த வழி, அவன் யாவனென்னும் அவாய்நிலையை விலக்குதற்கு, ஒடுங்கியுளதாம் என்றதனையெடுத்து "உலகஞ் சங்காரகாரணனால் உற்பத்தியாம், ஆண்டொடுங்குதலின் யாதுயாண்டொடுங்கும், அஃது அதனிலுற்பத்தியாம், மண்ணிற்குடம்போலும்" என்று இம்முறையே இவ்விரண்டாமதி கரணத்தை மூன்றதிகரணமாக வைத்துப் பொருள் கொள்ளுதல் ஆசிரியர் கருத்தென்பதை யோர்ந்துணர்ந்து கொள்க. அற்றேல், அஃதங்ஙனமாக, உலகம் உள்பொருளாயின் ஓரிடத்தொடுங்கி மீளவுண்டாக வேண்டுவதில்லை. இல்லது உண்டாப; உள்ளது அழியும், இல்லன தோன்றுங்கால் தொடர்ச்சியாய்க் கணந்தோறும் தோன்றியழிவனவற்றுள், முற்கணத்தினின்றழியும் பொருள் பிற்கணத்திற்றோன்றும் பொருட்குச் சார்பாதலின், அவை அவ்வச்சார்பிலே வித்தின் கேட்டினால் அங்குரந்தோன்றுமாறு போலத் தோன்றும். இதற்கொரு கருத்தா வேண்டுவதில்லை. எனப் பௌத்த மதத்தார் கூறுவரன்றோவெனின் :—

உலகம் உள்ளதாயினும் சங்காரகாலத்தில் ஒடுங்கியதாகலான் அவ்வுலகம் தான் ஒடுங்குதற்கிடமான சங்கார கருத்தாவினின்றும் படைப்புக் காலத்தில் மீள உளதாம். அற்றேல், ஒடுங்கிய உலகம் மீள உண்டாவானேன்? உண்டாக வேண்டுமாயின் முன் ஒடுங்காது நிலைபெற்றிருக்கலாமன்றோ, அவ்வாறன்றி ஒடுங்கி மீளவுளதாவது எற்றுக்கெனின்:- உள்பொருளாகிய உலகம் கருமமலம் பரிபாகமாதற் பொருட்டு ஒடுங்கி ஆணவமலம் பரிபாகமாதற் பொருட்டு மீளவும் உண்டாம். அற்றேல் முன்னுண்டானவுலகம் அழிய வேறுலகந் தோன்றுமென்னாமல் அதுவே ஒடுங்கி மீளவுளதாமென்பதற்குப் பிரமாணமென்னையெனிற் கூறுதும்:- எப்பொருள் எவ்வாறு நின்றொடுங்கிற்றோ அப்பொருள் அவ்வாறொடுங்கிய வாறேயுண்டாதல் எல்லாராலும் வேண்டப்படுமென்றுணர்க. எனவே அந்நியமம் இல்லையாயின், நெல், சமுகாய் வளராது நெல்லாய் வளருதற்குக் காரணம் என்னை? என்னுந் தருக்கமே (பிரதிவாதிக்கு விருப்பின்றிய பொருளைச் சம்பாதித்தல்) அதனை வலியுறுத்து மென்பதூம் கண்டு கொள்க. இங்ஙன் கூறிய சித்தாந்தத் துணிபு கொண்டு, இல்லதும் உள்ளதும் அல்லாத பொருள் உண்டாம் என்னுஞ் சூனியவாதிகளும் இல்லது முள்ளதுமாய பொருளுண்டாமென்னும் அநேகாந்தவாதிகளும் மறுக்கப்பட்டவாறு முணர்ந்து கொள்க. (தொடரும்)

★

அறம்.

தவத்திரு ஐயாறு, அடிகள்
(சித்தபாலையதேசிகர் அதீனப்புலவர், அடிவாரம், பழநி.)

முன் (ம 1 இ 7 ப 91) தொடர்ச்சி.

பிறவுயிர்கட்கு உண்டாம் துன்பத்தைத் தமக்கு வந்த துன்பத்தைப்போலவே கருதி, காப்பாற்ரு இடத்து, வீடுபேற்றிற்குக் கருவியாகத் தாம் வளர்க்கும் அறிவினுலே துறவியற்கு யாதொரு பயனுமின்ரும். நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல், முதலிய தமது செயல்களாலும், பிறவகைகளாலும், உயிர்கள் அடையத்தகுந்த துன்பங்களை அவைகளடையாமற் காத்தல் வேண்டும்.

"அறிவினு னுகுவ துண்டோ பிறிதினேய்
தன்னேய் போற் போற்ருக் கடை"

இக்குறள் மறவியானும் பிறஉயிர்கட்கு இன்னுதன செய்தலை விலக்கியது. புலாலுண்ணுமை, கள்ளாமை, வெகுளாமை, இன்னு செய்யாமை, முதலிய விரதங்கள் அனைத்தினும் செய்தற்கருமையாக உள்ளது கொல்லாமை, அறவினை யாதோ வென்னின் கொல்லாமையே கொல்லுதல் பிறவினையே துறவறத்தை மேற்கொண்டவர், அருளுடைமை அடியாகப் புலால் மறுத்தல், தவம், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வ்ய்மை, வெகுளாமை, இன்னு செய்யாமை, கொல்லாமை, இறுதியாய விரதங்களைக் கைக்கொள்ளல் வேண்டும். இங்ஙனம் கைக்கொண்டவர்கட்குத்தான் உண்மை, இன்மை இன்னதென்றுணரும் உண்மை யறிவு தோன்றும்.

ஞானம் :— அஃதாவது வீடுபயக்கவல்ல தோரறிவு. களைகளைந்து நீர்ப்பாய்ச்சினுல்தான் பயிர் செழித்துப் பயன்தருதல் உண்டு. இன்றேல் இன்ரும். அதுபோல ஆகாதன ஒழித்து ஆவன செய்தால்தான் அறிவு விளக்கமுறுவதாகும். இன்றேல் அறிவு விளக்கமுருது. அறிவு விளக்கமுற்ருல்தான் வீடு பேருய பயனைப் பெறலாம். நில்லாதன இன்னவை நிற்பதிது என்றுணர்வதே ஞானம்.

நிலையாமை :— தோன்றுவனவாய பொருள்கள் யாவும் நிலையாத தன்மை அறிவு என்ற அளவிலேயே அறிபவனும், அறியப்படுகின்ற பொருளும் உண்டென்பது பெறப்படும். அறிவு அகம். அறியப்படுவது-புறம் அகத்தையும், புறத்தைவும் தொடர்புபடுத்தி நிற்பது புலன். ஆகவே புறப்பொருள்களைப் புலன் வழியாகத்தான் அறியலாம் புலன் வழியாகத்தான் புறப்பொருள்கள் உண்டென்ற உணர்ச்சியும் உண்டாம், எனவே அறி

வினால் அறியப்படுகின்ற புறப்பொருள்களெல்லாம் புலனுக்குத் தோன்றுவன என்பது முடிந்தது. எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்ததாய உடன்பாடு நிலையாமை. பற்றறுதல்—பற்றுதற்கிடமான பொருள்களின் தன்மையை உணர்ந்தால்தான் கூடும். தோன்றுவன வாய பொருள்கள் நிலையற்றன என்பதை சிற்றறிவினரும் உணர்வர். அதுவும் அறியாமை புல்லறிவு. விறவி வயப்படுதல் துன்பத்திற் கேதுவாமென்று உணர்ந்து துறவற மேற்கொண்டோர் நிலையாமை யினை உணராத புல்லறிவினராதல் மிக மிக இழிவாம். ஒருவனிடத்தே மிருந்த செல்வம் வந்துசேருதல், கூத்தாடும் இடத்தே கூத்துக் காண்போர் கூட்டம் திரள் திரளாக வந்து கூடுதல் போலும். அச் செல்வம் போதல், கூத்துக்காண்போர் கூட்டம் கூத்து முடிந்துக் கலைந்து போதலை ஒக்கும். செல்வவாழ்வை விட்டு, செல்வத்தைத் தேடும் முயற்சியினையும் கைவிட்ட துறவியர்க்கும் ஊழான் அச் செல்வத்தினைப் பெறுதலுமுண்டு. ஊழ்முடிதல் இன்ன பொழு தென்பதனை யறியவியலாது. ஆகலான் நிலையற்ற செல்வத்தைப் பெற்ற பொழுதே அதனைக்கொண்டு நிலையாயினவற்றைச் செய்தல் வேண்டும்.

உடம்புடன் கூடிய உயிர் தனது தன்மையை உணர்வாரைப் பெற்றால், நாள் என்று அறுக்கப்படுவதாய காலவரையறை ஒன் றைப்போலத் தன்னைத் தோற்றுவித்து காலத்தை அறுத்துச் செல்லு கின்ற வாளின் வசப்பட்டதாம். எனவே, அறிஞர் நாளை நாளாகக் கருதார். உடம்போடு கூடிய தமது உயிரை யறுக்கும் வாளாகவே கருதுவர். காலம் என்பது அருவப்பொருள். முதலீறற்ற பொருள் ஆதலால் அதுவரையறைக்குட்பட்ட கண்டப்பொருளன்று. அங்ஙன மாகவும் பகலவனியக்கமும், உலகின் சுழற்சியும் முதலாயினபற்றி நாள், மதி, ஆண்டு என இத்தொடக்கத்தன ஆகவும், இறப்பு, எதிர்வு நிகழ்வு எனவும் வரையறுத்துக் கூறல் உலகியலுணர்வுக்கு வேண்டப் படுவது. பேச இயலாதபடி நாவை உள்ளடக்கி விக்குள் வருதற்கு முன் வீடு பேறளிக்கத்தக்க அறத்தை விரைந்து செய்தல் வேண்டும். இவ்வுலகம் நேற்று இருந்த ஒருவன் இன்றில்லையானான் என்று சொல்லும் நிலையாமை மிகுதியை உடையது. உடம்பிற்கும் உயிருக்கும் உள்ளதாய தொடர்பு, தான் நிற்றற்கிடமான கூடு, தன்னை விட்டுத் தனித்து நிற்கும்படி அக்கூட்டில் இருந்த பறவை அதனை விட்டுப் பறந்து போதலைப் போல்வது.

உறங்கலும் விழித்தலும் உடம்பு நலம்பெற இன்றியமையா- தனவாய் விரைவுடன் மாறி மாறி வருகின்றன. அதுபோல உயிர் பாசக்கட்டகன்று பதியொடு கலந்து நலம்பெற இன்றியமையாதன வாய் விரைந்து மாறி மாறி வரும் இயல்பினை யுடையன இறத்தலும் பிறத்தலும்.

"பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்"

மணிமேகலை. தோன்றிய யாவும் அழிவன. பிறந்தன யாவும் இறப்பனவே.

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

துறவு:— புறம்பாகிய செல்வத்தி னிடத்தும் அகமாய உடம்பினிடத்தும் உளதாய பற்றினைவிடுதல் ஒருவன் எந்த எந்தப் பொருளி னின்று நீங்கியவனுனுே அவன் அந்த அந்தப் பொருளினுல் துன்பம் அடைதல் இல்லாதவனுவான். ஒருவன் முற்றத்துறப்பின் அவன் இம்மையிலேயே எய்தக்கடவ இன்பங்கள் பல உள. அவற்றை விரும்பின் உடனே துறவறத்தினை மேற்கொள்ளவேண்டும். தவம் செய்வார்க்கு பற்றப்படுவதாய ஒரு பொருளும் இல்லாதிருத்தல் இயல்பு அதுவல்லாமல் பற்றப்படுவதாக ஒருபொருளேனும் உடைத்தாயிருத்தல் மீண்டும் தவத்தினைப் போக்குதற்கான மயக்கத்திற் கேதுவாகும். பிறப்பறுத்தலை யேற்கொண்டவர்க்கு உடம்பும் மிகை யாம். தான் அல்லாத உடம்பை யான் என்றும், தன்னுடன் தொடர் பின்றிய பொருளை எனது என்றும் கருதுகின்ற 'பற்றுதற்குக் காரணமான மயக்கத்தை யறுப்பவன் தேவராலு மடைதற்கரிய உயர் வான வீட்டுலகினை அடைவன். முற்றத்துறந்தவர்களே வீடுபேறு அடைந்தவர்கள். பற்றினையறுக்கவேண்டினுல், இயல்பாகவே பாசங் களின் நீங்கியோன் ஆய இறைவனடிகளைப் பற்றுதல்வேண்டும்.

மெய்யுணர்தல்:— உண்மையறிவு. உண்மை, பொருள் என்பன ஒரு பொருட்கிளவிகள். ஈண்டு, அறிதல் மனத்தானே அறிதல். பொறியான் அறிதலன்று. பொய்யினையும், மெய்யினையும். மனவுணர்வுதான் பகுத்தறியவல்லது பொறியுணர்வால் உணரப்பட்ட உலகம், மனஉணர்வால் உணரப்படுகின்ற இறைவன், பொறியுணர்வும் மனவுணர்வும் உலகையும், இறைவனையும் உணரும் உயிர். இம்மூன் றனையன்றி அறியலான பொருள் வேறில்லை. இம் முப்பொருளுண்மை யினை மன உணர்வால் உணர்தலே மெய்யுணர்வு. உலகைப் பற்றி கண்டது நிலையாமை. அதனுனே உண்மை யுணரப்படாமையும் தெளி வாயது. ஆகவே உணரப்படும் உண்மை, உலகைவிட்டு இறைவனை உணரப்படவேண்டியதாயது.

ஒருவற்கு மெய்யுணர்வு வேண்டிய தென்னகாரணமோ எனின் இயம்புவாம். உண்மையல்லாத பொருளை உண்மையென்று உணரும் மயக்க உணர்வால் மாண்பில்லாத பிறவி யுண்டாம். மயக்கத்தினின்று நீங்கி குற்றமற்ற உண்மையுணர்வினை உடையவர்கள்,

மெய்யுணர்வால் ஆணவ இருளைநீக்கி வீட்டின்பத்தினை அடைவார்கள் உண்மை உணர்விலே பழகப்பழக உலகியல் உணர்வு கெடும். ஆகையால் உலகம் சேய்மையதாம். வீட்டுலகம் அண்மையதாகும் மயக்க உணர்வால் ஐயப்பாடுண்டாகும். மெய்யுணர்வில்லாவிடத்து மயக்க உணர்வுண்டாகும் மயக்க உணர்வில்லாவிடத்துளதாவது மெய் யுணர்வு மெய்யுணர்வு தெளியப்படுவது. மயக்க உணர்வு நீங்கி மெய் யுணர்வினை எய்தினவர்க்கு தாமடைந்து நின்ற நிலவுலகைவிட எய் தக்கடவதாக உள்ள வீட்டுலகம் அண்மைய தாகும்

மனத்துடன் கூடிய ஐம்புல உணர்வைப்பெற்ற காலத்தும் உண்மை யுணர்விலார்க்கு அவ்வறிவாலாம் பயன்யின்றாம். உண்மை யுணரும் வழியினை ஆசிரியர் மூலமறிந்து, உண்மை யுணர்வுற்றவர்கள் நிலவுலகிலே பிறவாத நெறியினை அடைவார்கள். ஆசிரியர் மூல மறிந்த உண்மைப் பொருளை ஒருவனுடைய உள்ளம் ஒருமுகமாக நாலளவையானும், கருதல் அளவையானும் ஆராய்ந்துணரின் மீண்டும் பிறவியுண்டாகாது. பிறப்பிற்கு முதற்காரணம் அறியாமை. அதுநீங்க வேண்டுமேல் வீட்டின்பத்திற்கு நிமித்த காரணமான செம்பொருளை உள்ளத்தில் தெளிய உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணர்வதுதான் அறிவாகும்.

ஒருவன் தனக்குப் பற்றுகவுள்ள செம்பொருளை உள்ளபடி உணர்ந்து, இருவகைப் பற்றுக்களும் தலைகாட்டாது கெட்டொழிய ஒழுக வல்லவனுனல் முன்னா அடைதற்குரியனவாகநின்ற துன்பங்கள் மீண்டும் அவனை அடைய மாட்டா. விருப்பு, வெறுப்பு, அறியாமை என்னும் முக்குற்றங்களின் பெயரும் அழிதலான், அவற்றின் காரிய மாக உண்டாகக் கடவதாய துன்பங்களும் இலவாம்

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்".

அவா அறுத்தல் :—புலன்வழி ஓடுகின்ற உள்ளத்தை ஓடா மல் நிறுத்தல். யான் எனது என்னும் பற்றுக்களையறுத்து உண்மை யுணர்வு தலைப்பட்டார்களாயினும், அவர்க்கு எடுத்த உடம்பும் அது கொண்ட வினைப்பயன்களும் நின்றன ஆகலானே, துறக்கப்பட்ட புலன்கள்மேல் பல பிறப்பிடைப் பழகி வந்த பழைய பழக்க வசத் தால் ஒரோவிடத்து நினைவு செல்லலாகும். அதுவும் பிறவிக்குக் காரணமாம். புலன்வழி ஓடாமல் உண்மை உணர்தலால் உள்ளத்தை இடைவிடாது நிறுத்தினவர்க்குத்தான் அவாவினை யறுத்தல் கூடுவ தாகும் அவா—பேராசை,

உடற்புடன் கூடிய எல்லா உயிர்கட்கும், எக்காலத்தும் கெடாமல் வரும் பிறவியை உண்டாக்கும் காரணமாக உள்ளது

அவா என்பதாக நூலவர் நுவல்வர். மெய்யுணர்வினைப் பெற்ற ஒருவன், ஒன்றை வேண்டினால், பிறவாமையே வேண்டுமென வேண்டுவான். அப்பிறவாமை ஐம்புல நுகர்வை வேண்டாமையை விரும்ப அவனுக்குத் தானே வந்தெய்தும் வேண்டாமை போன்ற சிறந்த செல்வம் வேறில்லை. அவாவின்மையே தூயதாய வீடாகும். அவா அற்றவர்களே பிறவியற்றவர்கள். அவா என்று இயம்பப்படும். பெரும் துன்பம் கெடின், இன்பம் இடையறாது எய்துவதாகும். எக்காலத்தும் நிரம்பாத பேராசையை ஒருவன் விட்டால் விட்ட அப்போதே எக்காலத்தும் அழிவில்லாத வீட்டின்பத்தை அவன் அடைவன். ஆசைக்கு அடிமைப்பட்ட ஒருவன் உலகத்திற்கு அடியவன் ஆவான். ஆசையை அடிமை கொண்ட ஒருவன் உலகத்தை அடிமை கொள்வான். ஞானத்தால் நிலையாமையறிந்து, துறவு பூண்டு உண்மையுணர்ந்து, அவா அறுத்து, ஒவ்வொருவரும் வீடுபேறடைதல் வேண்டும்.

—அறம் முற்றும்.

பொருள்.

பொருள் என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகர் "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்னும் குறட்பாவின் உரையில் "மெய்மை" என்று உரை கூறியுள்ளார். அறமும் பொருளே, பொருளும் பொருளே, இன்பமும் பொருளே, வீடும் பொருளே இவற்றையே நாற்பொருள் என நமது ஆன்றோர் நவின்றனர். வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமையது ஆகலின், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையே நமது பண்டைத் தமிழ் நூல் பகர்வதாயிற்று.

"இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு" தொல்காப்பியம் இன்பத்தை விரும்பாத உயிர்கள் உலகில் இல்லை. எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்புவன இஃதியற்கை. எனவே ஆசிரியர் தொல்காப்பியனார் "இன்பம்" என்று முதலிலே கூறினார். இவ்வுலக இன்பத்தை விரும்புவோர்க்கு உலக வாழ்விற்கின்றியமையாத பொருள்கள் தேவை. பேரின்பப் பெருவாழ்வை விரும்புவோர்க்கு உண்மைப் பொருள் தேவை. எனவே முற்றத் துறந்த முனிவரர் விரும்புவதும் பொருளே, மன்னவர் விரும்புவதும் பொருளே. சுருங்கச் சொல்லுமிடத்து வாழ்விற்குத் தேவையானவற்றை எல்லாம் பொருள் எனவே புகலலாம். ஒவ்வொருவரும் அறநெறி பிறழாமல் பொருளினைத் தேடுதல் வேண்டும், அங்ஙனம் தேடப் பொருள்தான் அறத்தையும் இன்பத்தையும் அளிக்கும். பொருள் உடையவன் இம்மை மறுமைப் பயன்களை எய்துவான், தெய்வப் புலமை திருவள்ளுவனார் அருளிய திருக்குறளிலே, பொருட்பாலிலே பொருளியல் என்ற ஓர் பிரிவு உண்டு திருவள்ளுவர் திருக்குறளுக்கு "பொருளுரை" என்று "மணிமேகலை" என்னும் நூலாசிரியராம் தண்டமிழாசான் சாத்தனார் பெயர் கொடுத்தார்.

அவிரோத வுந்தியார்.

தவத்திரு. சுவாமி முக்தானந்தா அவர்கள்
(சங்கமூர்த்தி, ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை.)

முன் (ம 1 இ 7 ப 94) தொடர்ச்சி

இன்பமே வீடென்பதின் இலக்கணம் :—

மேற்கூறிய வண்ணமுள்ள பொருள்களே, மாயா போகங்களெனப்படுவன. அவை யாவும், தோற்றமுடையன; ஆதலால், அழிவுடையன. அவை அழிவெய்துதற்கு முன்னும், வரம்பினுட்பட்டவை (பரிச்சின்னம்) ஆகையால், நீக்கமுடையன. நீங்குதற்கு முன்னரும், பல படித்தான ஏற்றத் தாழ்ச்சிகளை யுடையன ஆதலால், ஒன்றற் கோன்று சிறப்பையும் உடையன. இத்தன்மையனவாயிருத்தலால், அவைகளால், துன்பமே யன்றி, இன்பமாகாது. என்பதனை, ஐயம் நீங்கித் தெளிந்துய்ய, உந்தி யுணர்த்துவது காண்பாம்.

அ—உந்தியார் :—

7 பூரண மும்மாம் பொருவிலா னந்தக்கு
நேரியா தின்பம்வே றுந்தீ பற
நீங்காச் சுகமதே யுந்தீ பற

பொருள்:— ‘பூரணமும் ஆம்’— (முற்கூறியபடி “அழிந்ததாகவோ அழிவதாகவோ கண்டாயினுங் கேட்டாயினு மில்லை” யென்ற தன்மைய தல்லாமலும்) நீக்கமற நிறைந்தும் உள்ளதான, ‘பொருவு இலா’—ஒப்பு இல்லாத, ‘ஆனந்தக்கு’— இன்பத்திற்கு, ‘நேர்’—ஒத்ததான ‘வேறு இன்பம்’—மற்றுமோரு இன்பம் ,?யாது’?–யாதுளது? இல்லை; ‘அது ஏ’—(அழிவின்மையால் காலத்தாலும், நிறைவுடைமையால் இடத்தாலும் முற்கூறப்பட்ட) அந்த இன்பமே, ‘நீங்காச் சுகம்’—இயல்பாகவே என்றுமுள்ளதான நீக்கமற்ற இன்பமாம்; என்று சிறுமிகாள் உந்திப் பறவுங்கள்! உந்திப்பறவுங்கள்!! என்கின்றது

இதனால் எல்லையற விரிந்துளதாய், யாதோன்றுண்டோ? அதுவே யன்றி, அதினின்றும் வேறெனக் கருதுவதற் கோன்றில்லை. காண்பன வனைத்தும் கயிற்றரவுபோல் மனமயக்கமே என்று விட்டவன், அவ்வின்பத்தைக் காண்பான்

எடுத்துக் காட்டு

சிவபோகசாரம்:—

"என்னை யறிவென்றான் என்னறிவி **லானந்தந்**
தன்னைச் சிவமென்றான்" என்றும்

தத்வாமிர்தம்:—

"மறை தேரும்;
தேரு **நிரதிச யானந்தமேசிதை வற்ற பொருள்**" என்றும்

ஆத்ம வித்யா விலாசம்:—

"தூய குருபரன் **வசன** மதனிறைற் றுயர்தருமச் சுழுத்திநீங்கி, யேயொருவ னெங்கேனு **மானந்த வாரிதியில்** இலங்குமாதோ"

என்றும்

"ஏராரும் ஞானவரன் லீலையினை யெய்தி **யெங்கும் எல்லையே யில்லா, நீராரு மானந்த நீரதியி** னிதம்படிந்து நிகழ்கின்றானே"

என்றும்

சொரூப சாரம்:—

"ஈதெல்லாம் நாமலவென் றெண்ணியன**நந் தானந்த**
போதநா மாகாத போது" என்றும்
எல்லாக் கவலையுமற் **றின்புற் றிருப்பதுவே**
சொல்லாரு முத்தீச் சுகம்." என்றும்

சிவானந்த மாலை:—

"துன்பமயக் காகியபொய்த் துட்டபந்த நோயதனை
யின்பமெனக் கொண்டிங் கிகழ்ந்தேனே—யன்பிலெழுந்து
ஓவாத மெய்யுணர்வா யுள்ளேநின் றுள்ளுருக்கும்
தாவா வானந்தந் தனை" என்றுங் கூறியுள்ளன காண்பாம்

பெற்ற வறிவாற் பெறும்பயன் வீடே என்பது

புறத்தே சூழ்ந்துள பற்றுக்கள் முற்றும் அறவே விட்டு, இவற்றால் முன்னரே படிந்து, பல பிறவிகட்கு வித்தாயிருந்த, உட்பற்றையும் விட்டதனால், அடையப் படுவதாய், என்றும் உள்ளதும், எங்கும் போதுளியதுமான, ஒப்பற்ற இன்பமாயது எது? அதுவே 'வீடு' என்கின்றது;

அ—உந்தியார் :—

8 ஆதலாற் பெற்ற வறிவாற் பெரும்பயன்
ஓதும்வீ டேயென வுந்தீ பற
உண்மைநூல் யாவுமென் றுந்தி பற

பொருள்:—'ஆதலால்'—(வேண்டாமை யென்று விலக்கியதாற் பெறப்படுவதும்; நிலையாய், நிறை வாய், ஈடற்றது மாயுள்ளது, இன்பம். இஃது பற்றனைத்து முற்றத்துறந்த பான்மையினர்க்கே வாய்ப்பதாகும் அந்நிலையே வீடாம்) ஆதலின் 'பெற்ற'—(ஒருவன், பெறற், கரிதான பிறவியைப் பெற்றும், உறற்கரிதான நூலுணர்வை யுற்றும் வாய்க்கப்) பெற்ற; 'அறிவால்'—நுண்ணுணர் வினால்; 'பெறும்பயன்'—அடையத்தக்க பயனாவது; (யாதெனின்?) 'வீடேஎன'—வீடுதான் (முக்திதான்) என்று; 'உந்தீபற'—உந்திப் பறவுங்கள் (இதனை) 'உண்மை நூல் யாவும்'—உண்மையையே உரைப்பனவாகிய மெய் நூல்கள் அனைத்தும்; 'ஓதும் என'—(இவ் வீடு ஒன்றனையே) சொல்லுவனவாக உள்ளன என்று; 'உந்தீபபற'—உந்திப் பறவுங்கள்.

எடுத்துக்காட்டு.

தேவிகா லோத்ரம் :—

"பிறந்து பெற்ற வறிவாற் பெறும்பயன்
நிறைந்த நீர்முகில் நீங்கிய வானென
வறிந்து தம்மை **யமலவி யாபகம்**
செறிந்து நல்ல தியானத திருத்தலே."

திருக்குறள் :—

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்"

திருமந்திரம் :—

"முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம்
பின்னைப் பிறவியிற் பெற்று லறியலாம்
தன்னை யறிவ தறிவாமஃ தன்றிப்
பின்னை யறிவது பேயறி வாமே"

தொடரும்

யோக சிகோப நிஷத்—தமிழ் மொழிப்புரை.

தவத்திரு திரிமூர்த்தி சுவாமிகள்,
(ஸ்ரீ சாது சுவாமிகள் ஆஸ்ரமம், பழநி.)

முன் (ம 1 இ 7 ப 94) தொடர்ச்சி.

(அ... கை) சுழுமுனையே முக்தி வழியெனவும் காலத்தை யுண்பதெனவும் கூறல்.

யானை, எங்ஙனம் து திக்கையால் என்றும் நீரைப்பருகுகின்றதோ அங்ஙனம், யோகி சுழுமுனையாகிய தண்டால் காற்றை இழுக்க வேண்டும். வஜ்ரதண்டமாகிய முதுகெலும்பிலிருந்து இருபத்தொரு மணிகள் உண்டாயின. அவைகளெல்லாம், நூலிற்கோக்கப்பட்ட மணிகள் போன்று சுழுமுனு நாடியில் கோக்கப்பட்டுள்ளன. அவைகள் இருபத்தொரு அனுபவவடிவ ரத்தினங்கள் என்பது அறியவும். அவைகள் முக்தி வழியாகிய சுழுமுனு நாடியில் முழுதும் பரவி நிலைபெற்றுள்ளன. இவ்வித அனுபவங்களின் முடிவில், முக்தி உளதாகின்றது. சூரிய சந்திரர்களின் நடையிலிருந்து எங்ஙனம், காலம் அறியப்படுகின்றதோ, அங்ஙனம், யோகம் முயல்பவனிடத்து, காலம் அறியப்படுவதில்லை எங்ஙனமெனின்? பூரித்துக் கும்பித்த காற்று சுழுமுனையில் ஒடுங்குகின்றது. வெளியில் வருவதில்லை யோகி மீண்டும் மீண்டும் அவ்விதப் பயிற்சி செய்வதால், காற்று வெளிப்படுவதே இலலை. ஆகையால், இதுவே காலத்தையுண்ணும் சுழுமுனையின் இலக்கணம் என்பது அறிக. இடைபிங்கலை களாற் பூரித்த அந்தக் காற்று, சிறிது கும்பகத்தை அடைந்து பிறகு உடலெங்கும் பரவுகின்றது பிறகு சுழுமுனு வழியாக வெளிப்படின் உடல் மெலிகின்றது. நிரப்புவதால் உடல் வளர்கின்றது (122)

(அ .. கை) சுழுமுனையின் அடைவால் பிரம்ம ஞானம் உண்டாமெனக் கூறல்

எதிலிருந்து எல்லாக் கருவிகளுடனும், மனந்தோன்றிய தாமோ அதனிடத்திலேயே, யோகி யோகப் பயிற்சியால் மனதை ஒடுக்குகின்ருன். சித்தம் ஒடுங்கிய பின்னர், பிராணனும் அங்கேயே ஒடுங்குகின்றது பிறகு அந்த யோகி இடையருது யோகத்தைப் பயில்வானுக நரி எங்ஙனம், இரத்தத்தைத் தானேவலிந்து இழுக்கின்றதோ, அங்ஙனம், யோகவன்மையால் சுழுமுனு நாடியானது எழுதாதுக்களேயும் உண்டுவிடுகிறது. இத்தகைய யோகப் பயிற்சியாலும், ஆசனப்பயிற்சியாலும் மனம், இறந்தே விடுகின்றது. பிறகு அவனுக்கு வீர்யம் கீழ் வீழ்வதில்லை. அவனே சிறந்த ஞானத்தைப் பெற்று அகங்காரமற்ற

சுகவடிவ முக்தனுகின்ருன் என்பது அறியவும். இங்ஙனம், சித்தம் பிராணன், இவைகள் அழிவுற, யோகம் பயிலாதவர்களுக்குச் சாஸ்திரம் பயனில்லை. ஆன்ம ஞானமும் பயனில்லை. ஆசிரியனும் பயனில்லை முக்தியும் பயனில்லை என்பதாம். அவர்களே அறியாமையால் வீணே உடலை வீழ்த்துகின்றனர். என்பது உணர்க. (126)

(அ... கை) யோகப் பயிற்சியால் தனது உண்மை நிலையைப் பெறுவன் எனக் கூறல்.

பிரம்மாவே! இரேசக பூரகங்களை விடுத்த பின், காற்று உறுதியாய் அசையாது நிற்குமாயின், அவனுக்கு பல்வேறு நாதங்கள் கேட்கப் படுகின்றன. பிறகு சந்திரமண்டலம் அமுதை பொழிகின்றது. அதனுல் உடலிலுள்ள எல்லா நோய்களும் பசிதாக முதலியனவும் ஒழிகின்றன அப்பொழுதே அவன், சச்சிதானந்த வடிவ தனது ஒப்பற்ற நிலையைப் பெருகின்ருன் என்பது அறியவும். இத்தகைய யோகசித்தியின் இலக்கணம் உனக்கு அன்போடு சொல்லப்பட்டது. (128)

(அ....கை) மந்திரமுதன் நான்கின்கூட்டே மஹாயோகமெனல்

மந்திரயோகம், லயயோகம், ஹடயோகம், ராஜயோகமென முறையாய் நான்கு படிகளாகின்றன. மஹாயோக மொன்றையே நான்காய்ப் பிரித்துச் சொல்லப்பட்டது. (129)

(அ....கை) மந்திர யோகத்தின் இலக்கணங் கூறல்.

மூச்சுக் காற்று ஹ என்ற வொலியுடன் வெளிப்படுகின்றது. ஸ என்ற வொலியுடன் உள் நுழைகின்றது. இதுவே, ஹம்ஸ மந்திரமாகின்றது, இந்தஹம்ஸ மந்திரத்தை எல்லாவுயிர்களும் ஜெபிக்கின்றன. இம்மந்திரபானது ஆசாரியனுல் சுழுமுனுவழியில் ஸோஹம் எனமாற்றி உபதேசிக்கப்படுமாயின், இதுவே, மந்திரயோகமாகின்றது. (131)

(அ....கை) ஹடயோகத்தின் இலக்கணங் கூறல்.

ஹகாரத்தால் சூரியன் சொல்லப்படுகின்ருன்; ஸகாரத்தால் சந்திரன் சொல்லப் படுகின்ருன். இச்சூரிய சந்திரர்களின் சேர்க்கையே ஹடயோகமெனப் படுகிறது. மேற்சொன்ன மந்திரயோகத்தாலும், இந்த ஹடயோகத்தாலும பின்புறமுள்ள சுழுமுனையில் வழியுண்டாகின்றது என்று அறிக. (133)

(அ....கை) இலயயோகத்தின் இலக்கணங் கூறுகின்றது.

அடயோகப் பயிற்சியால் உடலிலுள்ள எல்லாக்குற்றங்களும், சோம்பலும், நீங்குகின்றன. பிறகு இலயோகத்தால் ஜீவான்ம பரமான்

மாக்களின் ஐக்கியம் உண்டாகின்றது. இந்த லயயோகமானது முற்றுப்பெறின் சித்தம் ஒய்வு பெறுகின்றது. இலயோகத்தின் பயனாகிய சித்தவொழிவில் காற்று அசையாது நிற்பதாகிறது. சித்தம், பிராணன், இவைகளின் ஒழிவால்முடிவிடமாய் தனதான்ம இன்பமாயுள்ள சுகத்தைப் பெறுகின்றான். (135)

(அ....கை) இராஜயோகத்தின் இலக்கணங் கூறல்.

ஜீவர்களின் மஹாக்ஷேத்திரமாகிய யோனி நடுவில், செம்பருத்தி, கற்றாழைகளின் மலர்கள் போன்ற நிறமுள்ள செந்நீருளது. அது தேவிதத்துவமெனப் படுகிறது. புருவமத்தியிலுள்ள சந்திரனிடத்தில் வெண்ணீர்உளது. அது சிவதத்துவ மெனப்படுகிறது. இச்செந்நீர், வெண்ணீர்களின் சேர்க்கையே இராஜயோகமாகிறது. இந்த ராஜயோகப்பயிற்சியால் அணிமாமுதலிய சித்தியைப் பெற்று யோகிவிளங்குவன் என்று அறியவும். (137)

(அ....கை) யோகத்தின் பொதுவிலக்கணமும், யோகத்தால் வீட்டினடைவுங் கூறல்.

பிரம்மாவே! மேற்சொன்ன யோகம் நான்கும் பிராணபானன்களின் ஐக்கிய மென்றே அறியத்தக்கது இங்ஙனம் சுருக்கமாகச் சிவபெருமானாற் சொல்லப்பட்டது. முறையான யோகப்பயிற்சியாலேயே முக்தி அடையப்படுகின்றது. வேறுவழியாற் பெறப்படுவதன்று இம்முக்தியினடைவு குரங்குப்பிடி வழக்கெனப்படுகிறது.140)

(அ கை) யோகசித்தி பெறாது இறந்தவனுக்கு மறுபிறப்பிற் சித்தியுண்டாமெனல்

யோகி தவறுதலால் யோகசித்தியைப்பெறாது உடலை விடுவானாயின் முன் நினைவுடன்கூடி வேறுஉடலை அடைகின்றான், பின்னர் நல்வினைப்பயனால் குருவையடைந்து யோகசித்தியைப் பெறுகின்றான், அவனுக்குப் பின்புறமுள்ள சுழுமுனைவழியானது விரைவில் திறக்கப்படுகிறது. இது அவன் முற்பிறப்பிற் செய்தபயிற்சியின் பயனென்று அறிவாயாக, (142)

(அ....கை) யோகப் பயிற்சியே தடையற்ற முக்தியைத் தருமெனக் கூறல்.

இந்த யோகவழியே நன்கு அறியத்தக்கது. இது காகபுசுண்டரது கொள்கை எனப்படும். இந்த காகமதத்தினும், வேறு யோகப் பயிற்சி சிறந்ததாயில்லை. அந்தக் காகரது வழியாலேயே முக்தியடையப்படுகின்றது. வேறு வழியாலாவதன்று எனச் சிவனால் சொல்லப்பட்டது. (144)

(அ....கை) யோகிக்கு எல்லாச் செல்வத்தினடைவும் ஜீவன் முத்திப் பேறுங் கூறல்.

ஹடயோக முறையால் ஞானத்துடன் ஜீவவொடுக்க முதலியன உண்டாகின்றன. ஆனல் வெளிப்படையான சுழுமுன வழியன்றி வீட்டின் வழி ஏற்படுவதில்லை. அவ்வழியுண்டாயின் அவனுக்கு முதலில் நோய்கள் ஒழிகின்றன. பின்னர் உடம்பிலுள்ள சோம்பல் நீங்குகின்றது. பிறகு, பிராணன், அக்கினி, சூரியன் சந்திரன், சக்தி சிவம், இவர்களின் ஐக்கியம் உண்டாகிறது. பின்னர் சந்திரன் இடையருது அமுதைப் பொழிகின்றான். அதன் பின் காற்றுடன் கூடிய நெருப்பு எழுதாதுக்களையும் உண்டுவிடுகிறது. பிறகு பல்வேறு நாதங்கள் உண்டாகின்றன. உடல் மிருதுவாகின்றது. இவ்விதச் சித்தி முதலியவற்றை அனுபவிப்பதால் சோம்பலுண்டாகாவண்ணம் பயில்கின்ற யோகி, வானிற் செல்லும் ஆற்றலைப் பெறுகின்றான். அங்ஙனமே எல்லா மறிந்தவனாய், விரும்பிய வடிவு கொண்டு காற்றைப் போல் வேகமாய்ச் செல்லுகின்றான். அவனுக்கு எல்லாச் சித்திகளும் உண்டாகின்றன. அவன் மூவுலகங்களிலும் விளையாடுகின்றான் எரிந்த கற்பூரம் உருவமிலாது ஒழிவதுபோல், நானென்ற தடிப் பொழிந்த யோகி உடலிலாதவன் ஆகின்றான் இங்ஙனம் யோகச் சிறப்புற்ற தலைவன், தான் விரும்பியபடி பல்வேறு வடிவுகொண்டு யாவுஞ் செய்கின்றான். இவனே மகா யோகியும் ஜீவன முக்தனுமாகின்றான். இதில் ஐயமில்லை. (150)

(அ கை) செயற்கையிலும், இயற்கையிலுமுண்டான சித்திகளை மறைக்க வேண்டுமெனல்.

உலகில் சாதனங்களாலுண்டாவன, இயற்கையிலுண்டாவன எனச் சித்திகள் இருவகையன. இரசம், மூலிகை, தொழில் மந்திரம், பயிற்சி முதலிய சாதனத்தால் எந்தச் சித்திகள் உண்டாயினவோ, அவைகள், பொய்ச்சித்திகள் என்று அறியவும் சாதனமின்றித்தாமே உண்டான சித்திகள் எவையோ, அவைகள் தனதான்ம யோகமொன்றிலேயே நிலைத்தவர்களிடத்தில் உண்டாயினவென்று அறிக. இச்சித்திகள் ஈசனுக்குப் பிரியமானவைகள், உண்மையானவைகள் என்று கருதப்படுகின்றன. தனதுயோகவலிமையால் வெளிப்படுகின்றவர்களும், விரும்பிய வடிவு கொள்கின்றவர்களுமான பேராற்றல் வாய்ந்த அச்சித்தர்கள் என்றும் அழியாதவர்களாய் இருக்கின்றார்கள் உடலை மறந்து நினைவற்றயோகி களிடத்தும் இச்சித்திகள் நீண்ட நாட்குப் பின்னர் தோன்றுகின்றன. பெரிய யோகப் பயிற்சியால் அழிவற்ற ஆன்மாவினின்றும் உண்டான அச்சித்திகள் மறைக்துக்காக்கத்தக்கன. பயனின்றி என்றும் வெளிப்படுத்தாது இருத்தலே யோகசித்தனது இலக்கணம் என்று அறிக (156)

(தொடரும்)

வேண்டுகோள்.

அன்புடையீர்!

இத் "துறவி" வெளியீடு நாடு நலம்பெற தன்னலங்கருதா துறவியர்களால் புரியுந் தொண்டாகும். பொருள் ஈட்டவோ தன்னலங் கருதியோ அல்ல. பொருள் வசதிக்கேற்பத் துறவிஇதழ் 16 பக்கங்களைக் கொண்டு வெளிவருகிறது. அன்பர்களின் ஆதரவு பெருகின் அதிக பக்கங்களுடன் வெளியிட விழைகின்றோம். இன்னும் எத்தனையோ திருத்தங்களையும் எதிர்பார்க்கிறோம். இவைக்கெல்லாம் பொருள் மிக அவசியம் என்பதை அன்பர்கள் அறிவார்கள். ஏனவே இதனைக் கண்ணுறும் துறவிகளும், அன்பர்களும் சந்தாதாரர்களாகச் சேர்வதோடு தங்கள் நட்பினர், உறவினர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்தும் ஆதரிக்கும்படி வேண்டுகிறோம். இதுவரை சந்தா அனுப்பாத அன்பர்கள் தயவு செய்து தங்கள் சந்தாவை அனுப்பிவைப்பீர்களென எதிர் பார்க்கிறோம்.

குறிப்பு:— தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம், "துறவி" வெளியீடு ஆகிய இவை சம்பந்தமாக யாரிடமும், சந்தாவையோ, நன்கொடையையோ கொடுக்கவேண்டாம். அவ்வாறு கொடுக்கும் அன்பர்களின் பொருள் எங்களுக்கு வந்து சேரமாட்டாது. இதுவரை வசூல் செய்வதற்கென யாரையும் நியமிக்கவில்லை. சில துறவிகள் சங்கத்தின் பெயரைச் சொல்லி சிலரை ஏமாற்றி வருகிறார்களென்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—பதிப்பாளர்.

செய்திக் குறிப்பு

திருவண்ணாமலை ஸ்ரீ அண்ணாமலையார் ஆலயத்தில் ஆடி 11-ம் நாள் (27—7—55) அன்று **ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு** குருபூஜை விழா நடைபெற்றது. காலை 10-மணிக்கும், இரவு 10-மணிக்கும் திருவீதி திருவுலா நிகழ்ந்தன. இரவு 7-மணிக்கு திருக்கோபுர வாயிலில் ஸ்ரீ சுந்தரருக்கு இறைவன் விடைமேல் அம்மை அப்பனாக காட்சி கொடுத்தருளினார். இக்காட்சி மக்களின் உள்ளத்தை மிகவும் கவர்ந்துவிட்டன. அன்றுமாலை 3-மணிக்கு சென்னை, செம்மனச் செல்வி சிவத்திரு காஞ்சனமாலை அம்மையாரால் ஸ்ரீ சுந்தரருடைய சரிதம் பேசப்பட்டது. இரவு திருச்சேறை ;திரு. சிவசுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் குழுவினரால் நாதசுரக்கச்சேரியும் நிகழ்ந்தன. இவ்விழா ஒவ்வோராண்டிலும் அகில இந்திய ஆதிசைவ வாலிபர் சங்கத்தினரால் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

REGD. No. M. 6630.

அச்சுரிமை: ந. வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணாமலை
ஆசிரியரும், வெளியிடுபவரும்: சுவாமி சொரூபானந்தா, கீழ்ப்பாலூர்.